செ.வெ.எண்.27 நாள்: 14.05.2021

# தூத்துக்குடி சென்மேரிஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் செய்தியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி முகாமினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள், மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தனர்

---

தூத்துக்குடி சென்மேரிஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் செய்தியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.05.2021) நடைபெற்றது. இம்முகாமினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள், மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பெ.கீதாஜீவன் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தனர். இம்முகாமில் தூத்துக்குடி மாவட்டத்தில் பணியாற்றி வரும் செய்தியாளர்கள் மற்றும் அவர்களின் 45 வயதிற்கு மேற்பட்ட குடும்பத்தினருக்கும் கொரோனா தடுப்பூசிகள் போடப்பட்டது.

இம்முகாமை துவக்கி வைத்து மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை 80 ஆயிரம் நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மற்றும் மற்ற மாவட்டங்களை காட்டிலும் இது மிகவும் குறைவாகும். இன்னும் அதிகமான பொதுமக்கள் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்கும் வகையில் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். தடுப்பூசி போடுவதை விரிவுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய பகுதியிலும் இன்று முதல் மொபைல் வாகனங்கள் மூலம் தடுப்பூசி போடுவது எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. தடுப்பூசி போடப்பட உள்ளதை முன்தினமே ஆட்டோ விளம்பரம் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படும். மேலும் அந்தந்த பகுதியின் ஊராட்சி தலைவர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய பகுதிக்கும் 3 மொபைல் வாகனங்கள் மூலம் 3 கிராமங்களில் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற உள்ளது. இப்பணிகள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடும் வரை தொடர்ந்து நடைபெறும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆக்சிஜன் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அனைத்து நடவடிக்கையும் மேற்கொண்டு வருகிறார்கள். மத்திய அரசிடமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியுள்ளார்கள். பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முன்கள பணியாளர்களாக

அறிவிக்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்கு தடுப்பூசி போடக்கூடிய முகாம் நடைபெற்றுள்ளது. கிராமப்புற பகுதியில் மொபைல் கேம்ப் மூலம் தடுப்பூசி போடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் மூலம் தடுப்பூசியின் நன்மைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அதிக அளவு தடுப்பூசி போட முன்வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்கள் அனைவரும் எவ்வித பயமும் இன்றி அவசியம் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வது முக்கியமான ஒன்றாகும். முககவசம் அணிவது, கை கழுவுவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது, முக்கிய தேவையின்றி வெளியில் வராமல் இருப்பது ஆகியவைகளை பின்பற்ற வேண்டும். தடுப்பூசி போட்டுக்கொள்வதன் மூலம் அனைவருக்கும் பாதுகாப்பு உண்டாகும் என தெரிவித்தார்.

முகாமில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., தூத்துக்குடி சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.போஸ்கோராஜா, முக்கிய பிரமுகர் திரு.ஜெகன் பெரியசாமி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.